பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

When only The best is Good Enough



Buy Solide Pumps

# உதயன்

விலை ரூ2/50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்

பம்பையே வாங்குங்கள்

சுடர்: 4 சுக்கில ஸ்ரீ சித்திரை மீ 11 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ரமழான் பிறை 17 (24-04-1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-117

# ஜே. வி. பியின் மறைவிடங்களிலேயே அவர்களை சந்தித்து பேச பிரேமா தயார்!

## நாட்டில் அமைதியை ஏற்படுத்த எந்த அபாயத்தையும் ஏற்பாராம்!

கொழும்பு, ஏப்ரல் 24

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காக எத்தகைய அபாயத்தைச் சந்திக்கவும், எத்தகைய தியாகத்தைச் செய்வதற்கும் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா அறிவித்திருக்கிறார்.

தேவைப்பட்டால் மக்கள் விடுதலை முன்னணியினரை (ஜே. வி. பியினரை) அவர்கள் தலைமறைவாக இருக்கும் இடங்களுக்குச் சென்று சந்திக்கவும் தாம் தயார் என அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மத்திய தொகுதிக் கிளையின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை கொழும்பு சுசரித்த மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்படி அறிவிப்பை விடுத்தார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் கொண்டு வருவதற்கான முயற்சியில் நான் ஈடுபட்டுள்ளேன்.

என்ன தியாகம் செய்தாவது அமைதியை நாட்டில் நிலவச் செய்வதே எனது முக்கிய நோக்கம். அதற்காக நான் எத்தகைய அபாயங்களை ஏற்கவும் தயாராக இருக்கிறேன்.

இதற்காக எவரையும் எங்கும் சென்று சந்தித்துப் பேசத் தயாராக இருக்கின்றேன்.

மக்கள் விடுதலை முன்னணியினரை அவர்கள் தலைமறைவாக இருக்கும் இடங்களுக்குச் சென்று சந்திக்கவும் நான் தயாராக உள்ளேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று பேச்சுக்கள் நடத்த முன்வந்துள்ளதை பாராட்டுகின்றேன்.

சிங்கள, தமிழ் தீவிரவாத அமைப்புக்கள் அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்து பணியாற்ற முழுப் பாதுகாப்பையும் உதவியையும் அளிப்பேன்.

— இப்படி ஜனாதிபதி பிரேமதாஸ மேலும் சொன்னார். (உ-எ)

### ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் அறுவர் கொலை

கொழும்பு, ஏப்ரல் 24

தென்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஆறுபேரை ஜே. வி. பி. இயக்கத் தீவிரவாதிகள் நேற்றுக் கொலை செய்தனர்.

ஜே. வி. பி. இயக்க ஆதரவாளர்கள் இரண்டு பேர் அரசுப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். [ஒ-எ]

### காயமடைந்தவர் மரணமானார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

கடந்த 14 ஆம் திகதி கந்தர்மடம் குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் நேற்று மாலை யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இராசா சண்முகராசா (வயது 27) என்ற இளைஞரே நேற்று மரணமானவராவார். (உ-10)

### போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது

புதுடில்லி, ஏப்ரல் 24

இந்தியப் பணத்தில் ஐந்தரைக் கோடி ரூபா பெறுமதியான 480 கிலோ கிறும் ஹஷீஷ் போதை வஸ்துவை புதுடில்லிப் பொலீஸார் நேற்றுக் கைப்பற்றினர்.

கவனிப்பாரற்ற வீடு ஒன்றில் இருந்து இது கைப்பற்றப்பட்டது. [உ-எ]

### முச்சந்தி முரளி



'வருவேன்! நான் உனது மாளிகையின் வாசலுக்கே' எண்டு அன்புதாஸர் பாடுகிறார் போலை.........!

### பாதுகாப்பு நிலைமை குறித்து அமைச்சர் ரஞ்சன் ஆராய்வு

மத்திய மாகாணத்துக்கு நேற்று விஜயம் செய்த பாதுகாப்புத் துணைஅமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன அப்பகுதிகளின் பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்தார்.

நுவரெலியா, கண்டி, மாத்தளை போன்ற பகுதிகளுக்கு அவர் சென்றிருந்தார்.

இப்பகுதிகளின் பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர், சட்டத்தையும் ஒழுங்கையும் கண்டிப்பானமுறையில் அமுல் நடத்தும்படி உத்தரவிட்டார்.

அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கவேண்டாம் என்றும் அமைச்சர் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பாதுகாப்புச் செலவுகளுக்கு இவ்வருடம் 890 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ரஞ்சன் சொன்னார். (ஓ)

### வெள்ளியன்று நடந்தவற்றைக் கண்டித்து
### பண்ணாகம் பெண்கள் பேரணி; அமைதிப்படையிடம் மகஜர்

பண்ணாகம் தெற்குப் பகுதி பெண்கள் நேற்று ஊர்வலமாகச் சென்று அமைதிப்படை அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

பண்ணாகம் தெற்கு கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தீவைப்பு, துப்பாக்கிப் பிரயோகம், துன்புறுத்தல் சம்பவங்கள் குறித்து ஊர்வலமாகச் சென்ற பெண்கள் அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

திருமதி கனகநாயகம் அன்னபூரணம் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து அவர்கள் தமது விசனத்தை அதிகாரிகளிடம் கூறியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை திருமதி கனகநாயகம் அன்னபூரணத்தின் இறுதிச் சடங்கில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (ஓ-28)

### அரசு-விடுதலைப் புலிகள் பேச்சு:
### உடன்பாடு ஏற்பட்டால் இந்தியாவுடனும் யோசனை
#### தொண்டா வெளியிட்ட நம்பிக்கை

சென்னை, ஏப். 24

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களில் உடன்பாடு ஏதாவது ஏற்பட்டால் அது சம்பந்தமாக இலங்கை இந்தியாவைக் கலந்தாலோசிக்கும்,

இப்படி அமைச்சர் எஸ். தொண்டமான் நம்பிக்கை தெரிவித்தார்.

செய்தியாளர்களை திரு. தொண்டமான் சென்னையில் சந்தித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்தப்படும் பேச்சுக்களுக்கு முன்நிபந்தனை ஏதும் கிடையாது,

பிரச்சினைகளைத் தீர்க்க எல்லாத் தரப்பினருடனும் பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் அவர் சொன்னார். (ஓ-எ)

### பட்டினியை எதிர்நோக்கும் நாடுகளில் இலங்கை!
#### உலக உணவு ஸ்தாபனம் அறிக்கை

கொழும்பு, ஏப்ரல் 24

பட்டினியை எதிர்நோக்கும் பதினைந்து வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என உலக உணவு விவசாய ஸ்தாபனம் தெரிவித்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபானத்தின் ஓர் அங்கமே உலக உணவு, விவசாய ஸ்தாபனம் ஆகும்.

சூடான், எதியோப்பியா, பங்களாதேஷ், சோமாலியா, அங்கோலா, ஹெய்டி, ஜமேக்கா, லாவோஸ், லெபனான், மொஸாம்பிக், நிக்கரகுவா, பெரு, சியாராலியோன், வியட்னாம் ஆகியவை ஏனைய நாடுகள்.

இந்த ஆண்டு வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக 500 கோடி டாலார் (இலங்கைப் பணத்தில் 17 ஆயிரம் கோடி ரூபா) தேவைப்படும் என்று உலக உணவு, விவசாய ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் திரு. எடுவர்ட் சௌமா தெரிவித்தார். [ஓ-எ]

### பிரேமா திடீர் விஜயம் செய்வார்

கொழும்பு, ஏப், 24

நாட்டில் உள்ள அரசுத் திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் பொலீஸ் நிலைகளுக்கு திடீர் விஜயங்களை மேற்கொள்ள ஜனாதிபதி பிரேமதாஸ தீர்மானித்திருக்கிறார்.

பொலீஸ் தலைமைக் காரியாலயத்திற்கு இது தொடர்பாக சுற்றுநிருபம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

### சுபநேரம்

24 — 04 — 1989
திங்கட்கிழமை
சித்திரை - 11

சுபநேரம்;
12.00 முதல் 01.30 வரை

ராகுகாலம்:
07.30 முதல் 09.00 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### யுனிசெப் குழு இன்றுயாழ்நகரில்

யாழ்ப்பாணம். ஏப்ரல் 24

'யுனிசெப்' அதிகாரிகள்குழு ஒன்று இன்று யாழ்நகருக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளது.

யாழ். கல்வித்திணைக்களத்தின் பிரதம கல்வி அதிகாரியையும், அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தானிகராலய அதிகாரிகளையும் குழுவினர் சந்தித்து உரையாடுவர். [ஓ-9]

## இறைச்சிக் கடைகளுக்கு இன்று முதல் 'சீல்' வைப்பு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

குடாநாட்டில் கால்நடைத் தொற்று நோய் பரவி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து உத்தரவுபெற்ற இறைச்சிக் கடைகளுக்கு 'சீல்' வைக்கும் வேலைகள் இன்று திங்கட்கிழமை ஆரப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளின் பொறுப்பதிகாரிகள் இந்தப் பணியில் இன்று ஈடுபடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பின் பேரிலேயே இந்த 'சீல்' வைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ்.. மாநகர சபை எல்லைக்குள் மட்டும் தற்போது சுமார் 35 உத்தரவுபெற்ற இறைச்சிக் கடைகள் இயங்கி வருகின்றன.

சட்ட விரோதமாக இயங்கி வரும் இறைச்சிக் கடைகள் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. [இ]

### பேச்சுக் குறித்து இதுவரை இந்தியாவுக்கு தகவல் இல்லை

சென்னை, ஏப்ரல் 24

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில்நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகள் குறித்து புதுடில்லி அரசுக்கு இதுவரை அதிகார பூர்வமாக தகவல் ஏதும் தரப்படவில்லை.

-இவ்வாறு சென்னையில் நேற்று அறிவிக்கப்பட்டது.

என்றாலும் இருதரப்புப் பேச்சுக்களை இந்தியா வரவேற்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்நகரில் நான்காம் குறுக்குத்தெரு அருகே நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஸ்கூட்டர் மினிபஸ் விபத்தில் ஸ்கூட்டரில் வந்த இருவர் படுகாயமடைந்தனர்,

வங்கி ஊழியரான சச்சிதானந்தம் மார்க்கண்டு(34வயது) முத்து தெய்வேந்திரம் (40 வயது) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [உ-10]

### கல்முனையில் மோதல்:
### துயர சம்பவம் பரவ இடமளிக்க வேண்டாம்
#### அஷ்ரப் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 24

கல்முனையில் இடம்பெறும் துயர சம்பவங்களை மேலும் பரவ இடமளிக்க வேண்டாம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் இலங்கை, இந்திய அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கல்முனையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்-

தமிழ் பேசும் மக்களிடையே இனமோதல் ஏற்பட்டால் பேரினவாத சக்திகளே அதனால் இலாபமடைய நேரிடும்.

அனைவரும் பாரபட்சமற்ற முறையில் செயற்பட்டு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டும். எமக்கு இடையேயுள்ள ஐக்கியம் மேலும் நெருக்கமடைய வேண்டும் - என்று சொன்னார்.

### படையினர் பாதுகாப்பு வழங்க முடியாதிருப்பதால்
## கொழும்பு - யாழ் ரயில் சேவை தினமும் நடத்துவது சாத்தியமில்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

போதிய பாதுகாப்பு வழங்க முடியாதிருப்பதால் கொழும்பு யாழ் ரயில் சேவையைத் தினமும் நடத்துவது சாத்தியம் இல்லை.

இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த பிரிகேடியர் என். எஸ். ஜில் மேற்கண்டவாறு கூறினார்.

அரியாலையில் உள்ள அமைதிப்படை முகாமில் நேற்று நடந்த கலந்துரையாடல் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ரயில் சேவையைத் தினமும் நடத்த வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

நல்லூர், நாயன்மார்கட்டு, அரியாலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் இந்த கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கலந்துரையாடலின் போது பிரிகேடியர் ஜில் மேலும் தெரிவித்ததாவது:-

படித்த இளம் யுவதிகளையும் மக்கள் தொண்டர்படையில் சேர்த்து சிவில் நிர்வாக வேலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதிக்கு விடுதலைப் புலிகள் எழுதிய கடிதத்தின் விவரம்

கொழும்பு, ஏப்ரல் 24

பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்து இலங்கைஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் எழுதிய கடிதத்தின் விவரம் தற்போது வெளியாகியிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவால் ஏப்ரல் 15, 1989 எனத் திகதியிடப்பட்டு எழுதப்பட்ட இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:.

கௌரவ ஸ்ரீலங்கா ஜனாதிபதி அவர்கட்கு!

நாங்கள் 11-04-1989 அன்று உங்களுக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து நீங்கள் எங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளீர்கள்.

இலங்கைத் தீவில் எம்மிடையே உள்ள பிரச்சினையால் வெளிநாட்டுச் சக்திகள் தான் லாபமடைகின்றன எனக் கூறியிருக்கின்றீர்கள்,

நாம் என்றும் வெளிநாட்டுச் சக்திகளை அழைத்து வர இணங்கியதில்லை. எப்போதும் அப்படியான கொள்கையை ஆதரிக்கவும் இல்லை.

நீங்கள் பகிரங்கமாக எம்மைச் சந்திக்க விடுத்த வேண்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் வியாபாரம் நடந்து கொண்டிருக்கும் வீடியோ, ஓடியோ சாதனங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. 600 வீடியோ கசற் 80 O R G வீடியோ கசற், 140 E .P. ஓடியோ றைக் கோட், 60 L. P. ஓடியோ றைக்கோட் முழுமையாக விற்பனை செய்யப்படும். தொடர்பு; Asian Textiles, Palaly Road, Thirunelvely. (216)

உள்ளூரில் தயாரித்த புதிய மரக் கடைச்சல் இயந்திரம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: நாதன் தச்சுத்தொழிற்சாலை, 209 497 K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (241)

அலுமாரிகள், சோக்கேஸ், Hall Set, Office Table, ட்றெசிங் ரேபிள், Type Writer, றேசிங் சைக்கிள், புத்தக அலுமாரிகள், Rice Cooker, காஸ் குக்கர், எலக்றிக் கேத்தில், Iron Box, வோஷேஸ் ஸ்பிரிங் பெட், சிங்கர் தையல் மெசின்கள் மற்றும் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு இடம் 112, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (10641)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பிறிமா லோமன் வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், Gold n Comet சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்புச் சேவல் குஞ்சுகள், வளர்ந்த குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், கோழிகள், கோழித் தீன், கோழிகளுக்கான மருந்து வகைகள் ஆலோசனைகள் ஆகியனவற்றிற்குத் தொடர்பு கொள்ளுங்கள்; பரம் ஏஜென்ஸி, கிளிநொச்சி. (9313)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Cobb) புறொயிலர் குஞ்சு, (Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு (25. 4. 89) செவ்வாய்கிழமை விநியோகிக்கப்படும். சேவல் குஞ்சு விலை ரூபா 4. 50 தொகையாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. முன்கூட்டியே பதிவு செய்க. இல.9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் (10635)

Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் திங்கட்கிழமை (24- 4- 89)இலும், Hyline வெள்ளை, சுறுப்பு பேட்டுக் குஞ்சுகள், சுறுப்புச் சேவற் குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை (25- 4- 89)இலும் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் புதன்கிழமை (26-4 89)இலும் விநியோகிக்கப்படும். சறகுண ராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (225)

### எமது சேவையில்

கலர் பிலிம சுருள்கள் கொம்பியூட்டரில் Processing & Print பிரதி ஒன்று 4/75 மட்டுமே. அத்துடன் இலவசமாக அல்பம் [Album] குயிக்ஸ்ரார் [மனோகரா சந்திக் கண்மையில்] 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [10626]

### தேவை

புதிதாக தொடங்கப்பட்ட எமது வீடியோ ஸ்தாபனத்திற்குபெண் காசாளர்தேவை. யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது நேரில் தொடர்பு கொள்ளவும். வீடியோ விமல் 117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி [மேல் மாடி] யாழ்ப்பாணம். [10664]

### தவறிவிட்டது

த. வீரசிங்கம் 93, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் ஆகிய எனது அடையாள அட்டை இல: 132180148 V. கந்தர்மடம் ஆலடிச்சந்திக்கும், சங்கக் கடைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது கந்தர்மட சங்கக்கடையில் ஒப்படைக்கவும். (244)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஞாயிறு தினங்களில் ஆங்கிலம், சிங்களம் இரு மணித்தியால வகுப்புகள் நடத்தப்படுகின்றன கிழமை நாட்களில் தனிப்பட்ட. சிறுகுழுக்களிற்கான சிறப்பு வகுப்புகளும் வீடுகளிற்கும் சென்றும் கற்பிக்கப்படும் விபரங்களிற்கு நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும் .I.E.T 11B,ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம் [விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல்மாடி] [239]

### கணிதம்- மயூரதி வெளியீடுகள்

G. C. E (O/L) முன்மாதிரி வினாத்தாள்கள் மயூரதி வெளியீடு- 4, வெளியீடு -5, ஆண்டு 10, ஆண்டு 8, கணிதம் பல் தேர்வு வினாக்கள்' கலபுத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. சிறந்த கணித நூல்களுக்கு மயூரதி வெளியீடுகள் (10602]

### SPOKEN ENGLISH

Spoken English புதிய பிரிவு சர்வகலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் வசதியை முன்னிட்டு, ஆரம்பம் 29-4-89 சனி/ஞாயிறு நாட்களில். நேரம் 2-30—4-00 p.m தொடர்பு:- S. B. Iyar இல. 12, வைமன் வீதி, நல்லூர். (10663(

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises. 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [C /2124]

### MARRIAGE

Jaffna vellala educated Businessman age 39, Seek Partner 492, C/o Uthayan, Jaffna. (242)

## புதிய தலைவர்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 24

நீர்வேலி வலி-கிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்கத்தின் தலைவராகத் திரு. ச. நவரத்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.


ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

ஊர்காவற்றுறை ப. நோ கூ. சங்கத்தில் 1131 வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது. கேள்விகளை ''பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை'' என்ற விலாசத்துக்கு 28 4 89ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக சமர்ப்பிக்கலாம். விண்ணப்பதாரர் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தியிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை ரூபா 2/- செலுத்தி தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

ஊர்காவற்றுறை.
22 – 04 – 1989

[C-2322]


# நிவாரணப் பணம் பெறுவோர் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்

## அரசாங்க அதிபரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஏப்ரல் 24

நிவாரணப் பணக் கொடுப்பனவு பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் அவர்களுடைய பிரிவுகளில் பொது இடங்களில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு அரச அதிபரைக் கேட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அசம்பாவிதங்களினால் வேலை இழந்தவர்கள் மீண்டும் தமது தொழிலை ஆரம்பிக்க தற்போது புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் ரூபா 4,000 கொடுப்பனவு விவகாரத்தில் கிராமசேவை அலுவலர்கள் ஊழல், மோசடி, துஷ்பிரயோகம் செய்வதாக பொதுமக்களிடம் இருந்து வந்த புகார்களை அடுத்தே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சினால் வழ்ங்கப்பட்டுள்ள புனர்வாழ்வு அட்டையில் இதற்கு சிபார்சு செய்ய மேற்படி அலுவலகர்கள் சிலர் ரூபா 500 முதல் 2000வரை கோருவதாக பொதுமக்களிடமிருந்து கிடைத்துள்ள புகார்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் மற்றும் ஒரு சில கிராமசேவை அலுவலகர்கள் தமக்கு அறிமுகமானவர்களைச் சிபார்சு செய்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

போலி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தும் சிலர் நிவாரணம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேற்படி புகார்கள் அரச அதிபர், மாகாணசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஊழல், துஷ்பிரயோகம், மோசடிகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் சில கிராமசேவை அலுவலகர்கள் இயக்கங்களினால் விசாரணை செய்யப்பட்டு எச்சரிக்கையுடன் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (க-21)

## நாவலடி இராணுவ முகாம் மூடப்பட்டது

புதுக்குடியிருப்பு, ஏப்ரல்.24

புதுக்குடியிருப்பு கிராமத்தில் இருந்து 3 மைல் தூரத்தில் உள்ள நாவலடி என்ற இடத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம் மூடப்பட்டுள்ளது.

இம் முகாம் 1987ஆம்ஆண்டு பிற்பகுதியில் அமைதிப்படையின் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது அமைக்கப்பட்டது.

இம் முகாம் அமைக்கப்பட்டதில் இருந்து பிரயாணிகள் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு திவிர சோதனைகளுக்குப் பின்னரே பிரயாணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர். [க-126]

## ஐரோப்பிய நாடுகளில் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு

கொழும்பு, ஏப். 24

ஐரோப்பிய நாடுகளில் இலங்கையருக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதில் தொழில் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு ரஞ்சித் அத்தபத்து ஈடுபட்டிருக்கிறார்.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தூதர்களுடன் அமைச்சர் பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்

வேலைவாய்ப்புக்களை வழங்க சில ஐரோப்பிய நாடுகள் இணங்கியுள்ளதாகக் கொழும்புச் செய்தி தெரிவிக்கிறது.

இது சம்பந்தமாக அந்த நாடுகளுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. (ஒ-எ)

## அத்திவாரக் கல் நடுகை

வேலணை, ஏப்ரல் 24

நயினாதீவு சனசமூக நிலைய புதிய கட்டடத்திற்கான அத்திவாரக்கல் அண்மையில் இரட்டாங்காலி ஸ்ரீ முருகன் ஆலய வீதியில் செல்லம் பாலர் கழகத்திற்கு அருகாமையில் நாட்டப்பட்டது.

அத்திவாரக்கல்லை வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ச, பொ. தில்லைநாதன் நாட்டினார். (ச–167)

## சர்வோதய கிராமம்

கரவெட்டி கிழக்கில் உள்ள காண்டையன் திடல் என்னும் இடத்தில் சர்வோதயக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சர்வோதய இயக்கம் அதன் பூமிதானக் கோட்பாட்டிற்கு அமைய இராணுவ நடவடிக்கைகளால் அகதியாக்கப்பட்ட சுமார் நாற்பது குடும்பங்களுக்கு காணியைப் பகிர்ந்தளித்து வீடமைத்து வழங்கியுள்ளது.

கரவெட்டி கிழக்கு யார்ப் புலத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு. க. கந்தையா இதற்காக 45 பரப்புக் காணியைத் தானமாக வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது: [க-118]


## வெற்றிடங்கள்

கண்ணாடித் தொழிற்சாலைக்கு பபிளராக (BUBBLER) பயிற்சி பெறுவதற்கு 16 வயதிற்கும் 20 வயதிற்குமிடைப்பட்ட ஆண்கள் தேவை. பயிற்சிக் காலத்தில் நாளொன்றிற்கு ரூபா 20/– வழங்கப்படும். பயிற்சிக்காக குறிக்கப்பட்ட தொகை ஆட்களே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

உடன் நேரில் வரவும்.

சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ் நீர்வேலி,

[193]


## வேலைவாய்ப்பு: தகமைக்கும் இனவிகிதாசாரத்துக்கும்முன்னுரிமை

கொழும்பு, ஏப்ரல் 24

வேலைவாய்ப்புகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்யும்போது தகைமைகளுக்கும் இன விகிதாசாரத்துக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி திரு. பிரேமதாஸா பணித்திருக்கிறார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள், துணை அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் மத்தியில் பேசுகையில் ஜனாதிபதி இதனை அறிவித்தார். (ஒ-எ)

## வங்கிக் கிளைகளில் பணப் புழக்கம்

வட்டக்கச்சி, ஏப்ரல் 24

கிளிநொச்சி தபாலகக் கட்டடத்தில் கிளிநொச்சி, பரந்தன், மக்கள்வங்கிக் கிளைகளின் பணக் கொடுக்கல் வாங்கல் 19ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வைபவத்துக்கு கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் திரு. எஸ். லோகநாதன் தலைமை வகித்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் கிளிநொச்சி வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ். சிவசாமியிடம் முதலில் பணத்தைப் பெற்று வேலையை ஆரம்பித்து வைத்தார். [க–169]

## ஜனசக்தி பயிற்சி வகுப்பு

பூநகரி, ஏப்ரல் 24

ஜன சக்தி வறுமை ஒழிப்பு பயிற்சித்திட்டம் பற்றிய உதவிக் குழுக்களுக்கான பயிற்சி வகுப்புகள் பூநகரி உதவி அரசாங்க பிரிவு தோறும் உதவி அரசாங்க அதிபர் திரு. கே, பாலசுப்பிரமணியம் தலைமையில்நடைபெற்று வருகின்றன. (ச)

## கிளிநொச்சிமாவட்டகல்விநிலையை மேம்படுத்துவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 24

கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சியில் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளைக் கொண்டுவரக் கிளிநொச்சி மாவட்டத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முயற்சி எடுத்து வருகின்றது.

மாகாணசபை அரசுக்கு கல்வி தொடர்பான அதிகாரங்கள் கணிசமான அளவு வழங்கப்பட்டதை அடுத்து வடக்கு-கிழக்குமாகாணசபை உறுப்பினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளருமானதிரு.கே, என். கமலாஹரன் மாவட்டத்தின் சகல கொத்தணிஅதிபர்களுடனும்,பாடசாலை அதிபர்களுடனும் பாடசாலை அபிவிருத்திச் சபைகளுடனும், பழைய மாணவர் சங்கங்களுடனும் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளார்.

ஆசிரியர்கள் பற்றுக்குறை, வசதிக்கட்டண தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்கள், மாணவர்கள் எண்ணிக்கை தளபாடக்கட்டடப் பற்றுக்குறை, ஆய்வுகூட நூலக வசதிகள், மற்றும் வசதிகுறைந்த மாணவர்களின் விவரங்கள் போன்ற பல்வேறுபட்ட விவரங்களையும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளிடமிருந்து பெற்றதுடன், கல்வித் திணைக்கள உயரதிகாரிகளையும் சந்தித்து விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

கிளிநொச்சிமாவட்டத்தின் பாடசாலைகளில் உள்ள பற்றுக்குறை, தேவைகள் போன்றவற்றை மாகாணசபையில் கல்வி அமைச்சுக்குப் பொறுப்பானவரான முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாளிடம் நேரடியாகச் சமர்ப்பித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெறுகின்றன. [க]

## விளையாட்டுப் போட்டி ஒரு கல்வி நிகழ்ச்சி

### மெய்வல்லுநர் போட்டியில் உரை

பருத்தித்துறை, ஏப்ரல் 24

''பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் ஒரு பொழுது போக்கு நிகழ்ச்சி அல்ல. இது ஒரு கல்வி நிகழ்ச்சி. மாணவனின் உள உடல் திறன்களை விருத்தி செய்து அதன் மூலம் மதிப்பீடு செய்தலே விளையாட்டுப் போட்டியின் போது நடைபெறுகிறது. ஆதலால் இதனை மதிப்பீடு நிகழ்ச்சி என்றே சொல்லலாம்''

அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் மெய் வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும் போது வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. பா. இரகுநாதன் போட்டிக்குத் தலைமை வகித்தார்.

திரு. வீரபத்திரன் தனது உரையில் மேலும் கூறியதாவது ''மாணவன் பூரண ஆளுமை உள்ளவனாகத் திகழ உள உடல் அறிவுத் திறன்கள் விருத்தி அடைய வேண்டும் வெற்றி தோல்விகளைச் சமமாக மதித்து வாழ்க்கையில் நடக்கும் ஏற்றத் தாழ்வுகளை எதிர்நோக்கப் பழகிக்கொள்ள வேண்டும்''

''வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விளையாட்டுத்துறையில் போதிய பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

இதற்கான ஒரு திட்டத்தை விரைவில் தயாரித்து ஒவ்வொரு கொத்தணி மட்டத்திலும் பாசறைகள் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன்'' இப்படி அவர் கூறினார்.

சிறப்பு விருந்தினர் திரு. ஏ. வி. தங்கராசா (கல்வி அதிகாரி) பேசுகையில் இப் பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்துவதற்கு பாடசாலைக்கு அண்மையிலுள்ள காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு சுவீகரிக்க அப்பகுதிப் பெற்றோர்கள் முன்வந்து உதவ வேண்டும் என்றார்.

விளையாட்டுப் போட்டியில் வள்ளுவர் இல்லம் 346 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் [illegible] புள்ளிகளையும் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றன. [ச–118]

## உதவி நூலகர்

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 24

சாவகச்சேரி நகரசபையில் சிற்றூழியர்களாக கடமையாற்றிய திருமதி த. பாலச்சந்திரன், கு. வைகுந்தவாசன், பொ. இரவீந்திரன், சொ. சிவசுதன் ஆகியோர் சாவகச்சேரி பொது நூல் நிலைய உதவி நூலகர்களாகப் பதவி உயாத்தப்பட்டுள்ளனர். (ச–167)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### சீமாம்பிள்ளை அருளப்பு

தோற்றம்: 28 – 07 – 1924    மறைவு: 24 – 03 – 1989

மதுரமான இயேசுவே! மண்ணுலகினின்று விண்ணுலகிற்கு நீர் அழைத்துக் கொண்ட சீமாம்பிள்ளை அருளப்பு அவர்களின் ஆத்துமத்தை உமது பாதார விந்தங்களில் அரவணைத்து நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா மோட்ச பேரின்ப பாக்கியத்தையும் அளித்தருளும் சுவாமி ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 24-4-89 திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியில் பங்குபற்றுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

19, புதுறோட்,
கொய்யாத் தோட்டம். [10662]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### க. ஐ. சின்னத்தம்பி

மறைவு: 24 - 4 - 84

ஐந்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பும் பண்பும் எங்கள் மனதை விட்டு நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சிறீமதி ஞா. சின்னத்தம்பி
செல்வன் சி. ஞானகுமார்
செல்வி சி. ஞானேஸ்வரி

117/2 அரசடி வீதி,
கந்தர்மடம். (10514)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில் உள்ள

# 2,400 ஆசிரியருக்கு விரைவில் சேவைக்காலப் பயிற்சி

## கருத்தரங்கில் கல்வி அதிகாரி தகவல்

பருத்தித்துறை, ஏப். 24 யாழ். மாவட்டத்திலுள்ள 2,400 ஆசிரியர்களுக்கும் விரைவில் ஆறு நாள் தொடர்ச்சியான சேவை காலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்கு எட்டு இலட்சம் ரூபா வரை செலவாகும்.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற புகுநிலைத்திறன் ஆய்வுக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசிய கல்வி அதிகாரி திரு. கே.ஆறுமுகம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

முன்னைய கல்வி முற்றிலும் பாடத்தை 'மையமாகக் கொண்டிருந்தது' ஆனால் இன்று மாணவனை மையமாகக் கொண்ட கல்வியாக மாற்றப்பட்டு விட்டது.

அதிலும் ஆரம்பக்கல்வியில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளதென கல்வியியலாளர்கள் கருதுகின்றனர்.

அதன் அடிப்படையிலேயே புகுநிலைத்திறன் ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த ஆய்வு ஆண்டு 1 இல் கல்வி கற்க மாணவன் பாடசாலைக்கு வந்ததும் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த ஆய்வை இலங்கை பூராவும் செயற்படுத்தி ஆரம்பக் கல்வியிலுள்ள பாட நூல்களை மாற்றம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று ஆண்டு 1 க்கு வரும் மாணவர்களில் பத்துசதவீதத்துக்கு மேலானவர்கள் மீள் திறன் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

அவர்களை விளைக ஆண்டு ஒன்றில் (பாலர் வகுப்பு) அல்லது ஆண்டு இரண்டில் வைத்திருப்பதன் மூலம் அவர்களின் விவேக ஈவு மழுங்கடிக்கப் படுகிறது.

அதனால் மீத்திறன் உள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ப வகுப்புக்களுக்கு அனுப்புவதற்கு கல்வியியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சில மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போது எவ்வித அறிவுமில்லாமல் வருகின்றனர். அவர்களின் அறிவை விருத்தி செய்து ஒழுங்குபடுத்தி அவர்களை நல்வழி காட்டுதல் ஆசிரியர்களின் சீரிய பாரிய கடமை ஆகும்.

இப்படி அவர் கூறினார்.

திருமதி எஸ். சுப்பிரமணியம், திருமதி பி. சுந்தரலிங்கம் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். (இ–118)


வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!!

உதயன் வெளியீட்டகத்தின்

இந்துமத மாத மஞ்சரி

★ ஞானக்கதிர் ★

இப்போது அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. நீங்களும் தவறாது வாங்கிப் படியுங்கள்.

★ திருமுருக கிருபானந்தவாரியார்
★ ஆத்மஜோதி நா. முத்தையா
★ புலவர் நா. சிவபாதசுந்தரனார்
★ அ. குமரகுரு
★ கலாநிதி க. ந. வேலன்

ஆகியோரின் ஆழம் செறிந்த சமயக் கட்டுரைகளுடனும்—

★ மாமுனி யோகர் சுவாமி
★ ஸ்ரீ சத்திய சாயி பாபா

ஆகியோர் பற்றியும் —

★ நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஸ்வாமிகள்
★ சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
★ கொழும்பு, மட்டக்களப்பு, பருத்தித்துறை இராமகிருஷ்ண மிஷன் மடாதிபதிகள்

ஆகியோரின் ஆசியுரைகளுடனும்

★ விநாயகரின் வண்ணப்பட முகப்புடனும் முதலாவது கதிர் ஒளிபரப்புகிறது.

விலை ரூபா 5/- மட்டுமே!

உதயன் விற்பனை முகவர்களிடம் கிடைக்கும்


# புனர்வாழ்வு புனரமைப்பு ரூ.6 கோடி செலவிடத் திட்டம்

மட்டக்களப்பு ஏப்ரல் 24 வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ள முதற்கட்ட நிதியான 6 கோடி 20 இலட்சம் ரூபாவை புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்கு செலவு செய்ய திட்டமிட்டுள்ளது.

இத்தகவலை களுவாஞ்சிகுடி பஸ் நிலையத்துக்கான அடிக்கல்நடும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாகாணசபை நிதி, மீன்பிடி, கூட்டுறவுதுறை அமைச்சர் திரு. பி. கிருபாகரன் தெரிவித்தார்.

திரு. கோ. பாக்கியராஜா தலைமையில் வைபவம் நடைபெற்றது.

அமைச்சர் கிருபாகரன் அங்கு மேலும் உரையாற்றுகையில்; மூன்று மாதத்துக்குள் 3000வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 450 வீடுகள் கொத்தணி அடிப்படையில் அமைக்கப்படும் எனக் கூறினார். (ச– 21)

## வெற்றிடம்

மட்டக்களப்பு ஏப்ரல் 24 நில அளவைத் திணைக்களத்தில் படவரைஞர்கள, ஒளிப்படதொழில்நுட்பவியலாளர் போன்ற பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சை மூலம் இத்தெரிவு நடைபெறும். விண்ணப்ப முடிவு திகதி 28–04–1989. [ச–21




## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 25-4–1989 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் கட்டட கழிவுப் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் வெற்றி பெறுவோர் முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி ஏலத்தில் வெற்றி பெற்ற பொருட்கள் அனைத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்த வேண்டும்.

பிரதிப் பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்.
[சி]2200]


## நியமனங்கள்

வவுனியா ஏப்ரல் 24 புதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக திரு. தி. நாகேஸ்வரன் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் புனர் வாழ்வு புனர்நிர்மானப் பணிப்பாளராகர், மேலதிக அரசாங்க அதிபர் [காணிகள்] திரு செ. பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். [இ- 164]

## சர்வோதய இயக்க பாலர் பாடசாலை

பருத்தித்துறை, ஏப்ரல் 24 பருத்தித்துறை வெளிச்ச வீட்டுப் பகுதியில் சர்வோதய இயக்கத்தின் பாலர் பாடசாலை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப நிகழ்ச்சிக்கு பருத்தித்துறை முன்னாள் நகரசபை உறுப்பினர் திரு. வின்சன்ட் டீபோல் தலைமை வகித்தார். [க- 118]

## தொழில்நுட்ப சஞ்சிகை

ஊர்காவற்றுறை, ஏப்ரல் 24 வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித் திட்டத்தில் பயின்று வரும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து மாணவர் மன்றம் ஒன்றை அமைத்து அதன் மூலம் 'அருவி' என்ற பெயரில் தொழில்நுட்ப சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுள்ளனர். (க–16)


## அதிஷ்டலாப சீட்டு முடிவுகள்

புலோலி மேற்கு நாவலர் சனசமூக நிலையம் 14-4-89-ல் நடாத்திய அதிஷ்ட லாபச் சீட்டு முடிவுகள்,

| பரிசு இலக்கம் | | ஆறுதல் பரிசுகள் : 3 |
|---|---|---|
| 1-ஆவது | 1465 | (1) 1710 |
| 2-ஆவது | 0169 | (2) 1661 |
| 3-ஆவது | 1102 | (3) 0921 |

[243]

நாவலர் சனசமூக நிலைய
நிர்வாகிகள்,



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப்பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 30. 04. 1989
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

சேரும்போது செலுத்தவேண்டியது ரூ. 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (IBM COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்துகொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 29 .04. 1989




UNIKCO COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)

(சி/2303)



# சிங்கார வாழ்வுக்கு சிங்கர் வழிகாட்டி

மரத் தளவாடங்களால் மனங் கவர் கோலங்களில் மனைகளை அலங்கரிக்க சிங்கர் வழங்கும் சிங்கார வழி - அழகான வரவேற்பறை ஆசனங்கள் முதல், சுவர் மூலை நிலைக்காலிகள் வரை... உறுதியான மெருகிட்ட பலகைகளால் உருவாக்கிய மிகச் சிக்கன விலைத் தளவாடங்கள்.

சிங்கார வாழ்வுக்கு சிங்கர் தரும் இந்த வழிகாட்டியைப் புரட்டிப் பார்த்து, சாவதானமாகத் தேர்ந்தெடுங்கள்.

உங்கள் மனைக்கு மங்கலம் சேர்ப்பது சிங்கர்,




சுவர்மூலை நிலைக்காலி ரூ. 890/-

தொலைக்காட்சிப் பெட்டி நிலைதாங்கி ரூ. 1690/-

புத்தக அடுக்கலுமாரி - ரூ. 1890/-

தேநீர் பரிமாறும் சக்கரச்சிறு மேசை ரூ 1590/–

லாச்சி அலுமாரி ரூ. 3,290/–

ஒப்பனை மேசை ரூ. 3,190/–

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



### குமாரசாமி தர்மலிங்கம்
(தங்கராசா)
[வருமானவரி உத்தியோகத்தர்]

தோற்றம்: 08 - 08 - 1937 மறைவு: 25 - 01 - 1989

பாசத்தின் திருவிளக்காய்த் திகழ்ந்த உமது மறைந்த செய்தி கேட்டு செயல் இழந்து கலங்கினேம். அன்பின் தெய்வமே! நாமெல்லாம் கதறி அழுதிட சென்ற இடம் அறியோம். உமது ஆத்மா சாந்தி அடைய வேண்டுகின்றோம். அன்னாரது ஈமக்கிரியைகளில் கலந்தோர், அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன். 24-4-89 திங்கட்கிழமை நடைபெறும் (மானிப்பாய் இல்லத்தில்) அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்மார், சகோதரிகள், உற்றார், உறவினர்.

கட்டுடை,
மானிப்பாய். [215]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 06 | 07 | 1959 உதிர்வு: 24 | 04 | 1984



### இரா. ஜெயச்சந்திரன்
திதி: 30-04-1989

இளவயது முதல் கொண்டு
இன் தமிழர் நலம் பேணி
உரத்தினிலே வலுவோடு
உருவான காந்தியத்தின்
பலத்தோடு பணியாற்றி
பண்பு டையோர் மத்தியிலே
நலமாக நிறைந்திருக்கும்
தகையோனே ஜெயச்சந்திரா

★

காந்தியம் தான் மாறிய பின்
கலையிழந்த செந்தமிழர்
சாந்தி யெனும் விடுதலையில்
சாயிந்திருக்க உரிமையுடன்
ஏந்தி யொரு இலட்சியத்தை
இனத்துக்காய்ப் போராடி
நீந்திய வா வீரனெனச் சென்
நீராற்றை இத் தரையில்

★

கெ(எ)ட்டப்பர் கூட்டத்தால்
பட்டு விட்டாய் என்றாலும்
இட்டமுடன் நீ செய்த
இணைவுகளும் மாறிடுமோ!
விட்டெம்மை நீ பிரிந்து
விரைந்தாலும் ஐந்தாண்டு
முட்டுகின்ற துயரோடு
கொட்டுகின்றோம் கண்ணீர் பா

உனது துயரால் வாடும்:
மனைவி, பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

133, பிரதான வீதி,
திருகோணமலை. (10215)

# உலகிற்குப் பொதுவானது திருமறை:

## தமிழர் பண்பாடும் திருமறையும் இணைகின்றன

### கருத்தரங்கில் யாழ். ஆயர் பேச்சு

''திருமறை உலகிற்குபொதுவான மறை. ஒரு நாட்டுக்கோ ஒரு மொழிக்கோ வரையறுக்கப்படாத மறையாகத் திருமறை திகழ்வதால் எல்லா நாடுகளுக்கும், மொழிகளுக்கும் உரியதாகத் திருமறை இருக்கிறது''.

திருமறையை பரப்ப அனுப்பப்பட்ட பாதிரிமார்களுக்கு இரண்டாவது பொதுச்சங்கம் பின்வருமாறு பணித்துள்ளது குறிப்பிடத்தக்கது. நீங்கள் உங்களது நாட்டை மொழியை பிரதிபலிக்கச் செல்லவில்லை. அந்த நாட்டின் மொழியில் திருமறையை எடுத்துச் செல்லத்தான் போகிறீர்கள். இதனூடாகவும் தமிழர் பண்பாடும் திருமறையும் எந்தளவுக்கு இணைந்து போகின்றன என்பதை உய்த்துணர முடியும்''

யாழ். திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு செய்திருந்த 'தமிழர் பண்பாடும் திருமறையும்' என்னும் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த யாழ் ஆயர் அதி.வந். வ. தியோகுப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை யாழ் மறைக் கல்வி நடுநிலைய மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெற்றது.

மாலையில் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த பேராசிரியர் வண. நீ. ம. சவரிமுத்து அடிகள் ''கிறிஸ்தவ மன்றுட்டு வழக்கம் ஐரோப்பிய வழிவந்ததாகும் தமிழர்களான கிறிஸ்தவர்கள் தமது பண்பாட்டு முறையில் மன்றுட்டு, வழிபாட்டு முறைகளைக் கைக்கொள்ளலாம்.

முழந்தாள் இடுவதைவிட்டு கைகூப்பியும் மெழுகுதிரிக்கு பதிலாகக் கற்பூரம் கொழுத்தியும் வழிபடலாம்'' எனக் கூறினர்.

அருட்திரு கலாநிதி ஆர். யோசப் அடிகள் நடுவராகக் கொண்ட கேள்வி அரங்கில் புலவர் ஏ. டபிள்யூ அரியநாயகம், திரு. இ. ஜெயராஜ் திரு. மா, வேதநாதன், விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா, எம். ஏ. கலாநிதி இ. பாலசுந்தரம், பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணியம் ஆகியோர் பங்குகொண்டனர்.

மாலை 3 மணிக்கு சமயமும் பண்பாடும் என்னும் தலைப்பில் விவாத அரங்கு கவிஞர் எம். விக்ரர் [யாழ் ஜெயம்) தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் அருட்திரு. அ. சந்திரகாந்தன், அருட்திரு ஹில்லாறி ஜெபநேசன் அடிகள் முதலியோர் இதில் பங்குபற்றினர்.

கலை அரங்கு நிகழ்ச்சியில் குருநகர், நடன நல்லிசைக் கல்லூரி மாணவர்களது தாளவாத்தியக் கச்சேரி, செல்வி மதிசேவியர் குழுவினரது கும்மி மயில், நடனம் திருமறைக் கலாமன்றக் கிராமியக் கலைப் பிரிவினரது 'அம்பா' நாவாந்துறை சென். மேரிஸ்முத்தமிழ் மன்றத்தின் 'மனம் மாறிய மைந்தன், நாட்டுக்கூத்து என்பன இடம் பெற்றன.

வரவேற்புரையை திரு.வி, ஜே. கொன்ஸன்ரையிறும், நன்றியுரையை திரு. கி. பி பேர்பினஸும் நிகழ்த்தினர்.
[க-51]

சுஜேரா ரவல்ஸ்

வெற்றிடங்கள்

சவூதி அரேபியா (Saudi Arabia)

House Maids (பெண்கள்)
Labourers (ஆண்கள்)
Cleaners (ஆண்கள்)

தைவான் (Taiwan)

தைவானுக்குப் போக விரும்புவோர் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆங்கில அறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மூன்று கிழமைகளில் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

சுஜேரா ரவல்ஸ்
21, வேம்படி றேட், யாழ்ப்பாணம்.
(சி/2288)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### ஜெயரத்தினம் பாலராஜா

மலர்வு: 28 - 11 1921 மறைவு: 23 - 03 - 1989

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்ட அணையாச் சுடரே! இந் நாளில் அல்ல எந்நாளுமே உம்மை மறவோம். உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
C. A. S. பாலராஜா குடும்பத்தினரும், நண்பர்களும்.

பிரதான வீதி,
மன்னார். [10651]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 16.04 1934



உதிர்வு: 16.04.1987

அமரர்
### திரு. முருகேசு யோகேந்திரன்
திதி: 24. 04. 1989

அப்பா! என அழைக்க எமக்கிங்கு யாருமில்லை வருடம் தான் இரண்டாகியது! நினைவுகளோ ஓயவில்லை! உங்களைப் பிரிந்ததால் எமக்கிங்கு வேதனைகள் குறையவில்லை, வணங்குகிறோம் இறைவனை உமது ஆத்ம சாந்திக்காக.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கண்ணன் [illegible]
கே. கே. எஸ். வீதி,
இணுவில். (10646)

### கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஏப்ரல் 24

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றில் பல பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளையில் கூரையைப் பிரித்து இறங்கிய திருடர்கள் ஓடியோ வீடியோ கசற்றுக்கள் வானொலி உதிரிப்பாகங்கள் ஆகியவற்றைத் திருடி உள்ளார்கள்.

பிரஸ்தாப வியாபார ஸ்தாபனம் இராணுவ முகாமுக்குச் சமீபமாக உள்ளது. (அ-ரி)

### தேவாலயத்திலும் திருட்டு

குருநகர்ப் பகுதி பிரதான தேவாலயத்திலும், குருமனையிலும் கடந்த வியாழன் இரவு பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஆலயத்தில் முன்னரும் பல தடவை திருட்டுக்கள் நடைபெற்றுள்ளனவாம்.
[ஓ- 51]

### கிழிந்த உரப்பைகள்

வடமராட்சித் தபால் நிலையங்களுக்கு தபால் பொதிகள் உரப்பைகளில் அனுப்பப்பட்டு வருகின்றன. சில உரப்பைகள் கிழிந்த நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது
(இ-60)

கொம்பியூட்டர் பயிற்சி
Diploma in Data Processing & Computer Programming Course

புதிய பிரிவகள்:
BASIC : 26-04-89 (Week day) 10.00a.m
ADVANCED BASIC : 29-04-89 (Weekend) 1.00p.m

1st Payment Rs. 500/-
IBM SUPER / XT IBM COMPATIBLE, APPLE உட்பட பல நவீன Computerகளில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✶ மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.

IDP Computer Centre,
342, K.K.S. Road, Jaffna.
(சிவன் கோயிலடி)
Branch: 7th Mile Post, Mallakam.
[சி-2270]

## ஒப்புநோக்குநர் பதவிகள்

உதயன் நிறுவனத்தில் ஒப்புநோக்குநராகப் பணிபுரிவதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆகக் குறைந்தது ஜீ. சி. ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் அவசியம்.

தமிழில் நிரம்பிய புலமையும், ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

பகல், இரவு மாறிமாறிப் பணியாற்ற ஆயத்தமாக இருக்க வேண்டும். முன் அனுபவம் உடையவர்களுக்கு மேற்கண்ட வயதெல்லை, கல்வித் தகைமை கட்டாயம் என்பதில்லை.

ஏற்கனவே பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு நல்ல சம்பளமும் பேசித் தீர்மானிக்கப்படும்.

29-04-1989 ஆம் திகதிக்கு முன்னர் இரண்டு நற்சான்றிதழ்கள் அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகளுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு மனுச் செய்யவும்:-

முகாமையாளர் (ஆளணி)
நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. பொ. செந்திவேல் (செந்தில்)

அன்னையின் மடியில்: 25 - 04 - 1935 ஆண்டவன் அடியில்: 05 - 05 - 1988

திதி: 24. 4. 1989

தலைமகனே எங்கள் குலமகனே, குடும்பத்தின் ஒளிவிளக்கே, அன்பின் பிறப்பிடமே, எம்மை அன்பால் வளர்த்த ஆருயிர் அப்பாவே! உங்களைப் பிரிந்து ஆண்டொன்று மறைந்ததுவே, பண்பாய் உயர்ந்து நின்ற பாசத் தந்தையே! பரிதவிக்கின்றோம் உங்கள் பிரிவால் நாம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

71, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [சி/2228]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

**பொருள்:**

ஒழுக்க வரையறை இல்லாத பொதுமகளிரின் மெல்லியதோள், உயர்வில்லாத கீழ்மகன் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

24- 04 - 1989 த. பெ. இல: 23

# பலவீனத்தை உணர்ந்திடுக!

கல்முனைப் பகுதியில் தமிழ் - முஸ்லிம் கோஷ்டிகளிடையே ஏற்பட்ட சிறு சச்சரவு வளர்ந்து பதற்றம் உருவாகி இருக்கிறது. காலவரையறை இல்லாத ஊரடங்கை அமுல் செய்து, பதற்றத்தைத் தணித்து, வன்செயல்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

அமைச்சர்கள் இருவர் கொழும்பிலிருந்து விரைந்து சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் அளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது.

கிழக்கு மாகாணம், தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக, நட்புறவாக வாழ்ந்து வந்த பிரதேசம். தனிப்பட்டவர்கள் தமக்கிடையே உள்ள மனக்குரோதங்களை வைத்துச் சிறு சச்சரவுகளைத் தோற்றுவிப்பது அங்கு ஒரு வழக்கமாக இருந்தது.

ஆனால் இரு சமூகங்களையும் சேர்ந்த பெரியவர்கள் இணைந்து, அந்தச் சிறு சச்சரவுகளை குறிச்சி மட்டத்தில் அல்லது கிராம மட்டத்தில் தணித்துச் சமரசம் செய்துவிடுவர். அதன் காரணமாக தமிழ் - முஸ்லிம் சண்டைகள் பெரிய அளவில் பரந்த அளவில் பரவி நாசம் விளைவிக்க வாய்ப்பு இருக்கவில்லை.

ஆனால் இப்போது, மிகச் சமீபகாலமாக, ஒரு சில வருடங்களாக, தமிழ் - முஸ்லிம் சச்சரவுகள் கலவரங்களாக உருவெடுத்து பெரும் நாசங்களையும், அனர்த்தங்களையும் உண்டுபண்ணுகின்றன. கலவரங்கள் உண்டாகின்றன என்று கூறாமல் உருவாக்கப்படுகின்றன எனச் சொல்வதே பொருத்தம்.

தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதவிட்டு, அவர்களின் அண்ணன் - தம்பி உறவை முறித்து, அவர்களை நிரந்தர எதிரிகளாக்கி, அதன் மூலம் தமக்கு பலவித இலாபங்களைத் தேடிக் கொள்வதற்கென்றே சில தீய சக்திகள் முளைத்தன. தமது இலட்சியங்களை, இலக்குகளை அடைவதற்காக, அந்தத் தீயசக்திகள் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே உருவாகக் கூடிய கருத்து வேறுபாடுகள், அல்லது தனிப்பட்ட முறையிலான சிறு சச்சரவுகளுக்குக் காத்திருப்பது சாதாரணமாயிற்று.

கருத்து வேறுபாடுகள், சச்சரவுகளுக்கு வாய்ப்பில்லாத வேளையில், தாமே அவற்றை விதைத்து, இருசாராரையும் மோதவிடுவதிலும், கலவரங்களுக்குத் தூபமிட்டு அழிவுகளையும், நாசங்களையும் உண்டு பண்ணுவதிலும் அவர்கள் கைதேர்ந்து விளங்குகிறார்கள்,

தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோதவிடும் சதியில் ஆரம்பத்தில் ஓரிரண்டு சக்திகளே ஈடுபட்டன. அந்தச் சதிக்கு தமிழர்களும் முஸ்லிம்களும் இலகுவில் இரையாகிறார்கள் என்ற பலவீனம் அடிக்கடி வந்த கலவரங்களால் புலனாயிற்று; தெளிவாயிற்று.

அதனைக் கண்ட ஏனைய பல தீய சக்திகளும் தமது நோக்கங்களை அடைவதற்காகத் தாம் மறைந்திருந்து கொண்டு தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதவிட ஆரம்பித்துவிட்டன.

அதன் காரணமாகத் தமிழ் - முஸ்லிம் கலவரத்துக்கு தூபமிடும் தீயசக்திகளின், நாசகார சக்திகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. தமிழ் - முஸ்லிம் மக்களின் பலவீனம் எனும் தேனைச் சுற்றும் வண்டுகளாகப் பல்கிப் பெருகின. அதன் விளைவே இரு சமூகங்களுக்கு இடையிலும் சண்டை, சச்சரவுகள் அடிக்கடி உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு கலவரத்துக்கும் பின்னணியில் எந்தச் சக்தி நிற்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதே பெரிய கஷ்டமான காரியமாகிவிட்டது.

எந்தத் தீயசக்தி, எங்கே நின்று, எப்போது தமிழ்-முஸ்லிம் கலவரத்துக்கு வித்திடும், வளர்க்கும் என்பது தெரியாத அளவுக்கு நிலைமை இப்போது மோசமாகிவிட்டது.

தீயசக்திகளை இனங் கண்டு அவற்றின் வலையில் சிக்காமல் இருக்க தமிழ் - முஸ்லிம் மக்கள் மிக விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். தமது பலவீனத்தை அவர்கள் இன்னும் உணர்ந்ததாக இல்லை. தமது பலவீனத்தை முதலாகக் கொண்டு அடுத்தவர்கள் அரசியல், பொருளாதார லாபம் தேடுகிறார்கள் என்பதையும் இரு சாராரும் இன்னும் உணரவில்லை.

அந்தப் பலவீனத்தை இரு சமூகங்களில் உள்ள தீர்க்க தரிசனமில்லாத, குறுகிய கால தனிப்பட்ட லாபம் தேட முனையும் சில சக்திகள் மேலும் வளர்க்கின்றன என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மூன்றாம் பேர் வழிகளான தீயசக்திகளுக்கு, தமது சமூக நன்மையை மறந்து அவை துணைபோகின்றன.

— தமிழ் - முஸ்லிம் மக்கள் மோதிக் கொள்வதற்கு உள் சக்திகள், வெளி விரோதிகள் ஆகிய இரு சாராருமே காரண கர்த்தாக்கள். அந்த இரு சாராரையும் இனங் கண்டு கொள்வது, தமது பலவீனத்தை உணர்ந்து, புரிந்துணர்வை ஏற்படுத்தி வெளிவிரோதிகளுக்கு எதிராக ஒன்றுபட்டுச் செயற்படுவது ஆகிய இரண்டினதும் அவசியத்தை இரு சமூக மக்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். கொட்டும் வண்டுகளான தீய சக்திகளை விரட்ட வேண்டும். இல்லையேல் இரு சிறுபான்மைச் சமூகங்களும் வேண்டாத அனர்த்தங்களையும், அழிவுகளையும் அடிக்கடி அனுபவிக்க நேரிடும்.

★ இந்திய அரசியல்

# வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் ராஜீவ் இரு தொகுதிகளில் போட்டி!

வருகிற இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ராஜீவ்காந்தி இரண்டு தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்திருக்கிறார் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தர பிரதேசத்தில் சொந்தத் தொகுதியான அமேதியிலும் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள பாராமதித் தொதியிலும் திரு. ராஜீவ் காந்தி போட்டியிடுவார்

தற்சமயம் திரு. ராஜீவ் அமேதி தொகுதி எம். பியாக இருக்கிறார்.

அமேதி தொகுதியில் ஜனதாதள் தலைவர் திரு. வி. பி. சிங்குக்கு செல்வாக்கு அதிகம்.

அருகில் உள்ள அலகாபாத் தொகுதி இடைத் தேர்தலில் திரு. வி. பி. சிங் வெற்றி பெற்றார் என்பது தெரிந்ததே.

பொதுவாக திரு. சிங்குக்கு உத்தரப் பிரதேச மாநிலத்தில் அமோக செல்வாக்கு உண்டு.

இதன் காரணமாகவே தனது பாதுகாப்புக் கருதி ராஜீவ் மகாராஷ்டிர மாநிலத்தில் பராமதி தொகுதியிலும் போட்டியிட முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் வருகிற டிசம்பருக்கு நடைபெறவேண்டும்.

ஆனால் பிரதமர், வருறகி ஜூனில் திடீர் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தக் கூடும் என்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. (எ)

# பெண் என்றால் பேயாக மாறும் தி.மு.க. அரசு; கலைஞர் மீது ராஜேந்தர் கண்டனம்!

சென்னை, ஏப்ரல் 23

தமிழக சட்டசபையில் கடந்தமாதம் 25ஆம் திகதிநடந்த அமளிதுமளிக்கு தி. மு. க அரசே காரணம் என்று பிரபல சினிமா நடிகரும் டைரக்டருமான டி. ராஜேந்தர் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது:

பெண் என்றால் பேயும்இரங்கும் என்று சொல்வார்கள். ஆனால் தி மு க அரசோ பெண் என்றால் பேயாய் மாறுவோம் என்ற புதிய அத்தியாயத்தை அரசியலில் எழுத ஆரம்பித்து விட்டனர்.

அண்ணா எங்களுக்குக் கற்றுத்தந்தார் கடமையை என்று சொன்னார்கள், காரிகை ஒருத்தி கட்டியிருப்பதைக்கழற்றுவதுதான் இவர்கள் கற்றுக்கொண்ட கடமையா?

கட்டுப்பாடு அதற்கு தி, மு. கவில் இப்போது தட்டுப்பாடு.

கனிந்துவிட்டதாகக் கருணாநிதி கூறினார். அப்படியானால் அவர் ஜெயலலிதா விஷயத்தில் தலைகுனிந்து இருக்க வேண்டும்.

எனக்கு அவர் கனிந்ததாகவே தெரியவில்லை. காயாகத் தெரிகிறார். பழைய கதைகளைச் சபையில் கூறியதைக் கண்டால் 'பச்சையான' காயாக மாறிவிட்டார்.

முகிலைக் கிழித்து உதயமாகிறது என்று கூறினார்கள். அதனால்தானோ என்னவோ துகிலைக்கிழித்தால் என்ன என்று துணிந்து விட்டார் போலிருக்கிறது.

பெண் உத்தமியா பத்தினியா என்பது அந்தப் பெண்ணைப் பொறுத்ததே தவிர. பார்க்கிறவரின் கண்ணைப் பொறுத்ததல்ல.

நானும் ஜெயலலிதாவை எதிர்த்திருக்கிறேன். அந்தப் பாணிவேறு: தொனிவேறு.

அந்த அம்மாள் இவர்களின் கதையை எடுத்துவிடத் துவங்கினால் எங்கேபோய் முகத்தை வைத்துக்கொள்வார்கள்?

கண்ணாடி உடைந்ததாகக் கருணாநிதி கூறுகிறார். கண்ணாடி உடைந்தால் திரும்பி வரும். ஒருபெண் முன்னாடி இப்படி நடந்திருக்கிறீர்களே. அந்த மானம் போனது திரும்பிவருமா?

இன்று தமிழகம் முழுவதும் உங்களை எப்படி நினைக்கிறார்கள். அந்தக் கௌரவம் திரும்பி வருமா? எதிர்காலத்தில் எந்தப்பெண் சட்டசபைக்குச் செல்லநினைப்பார்?

ஜெயலலிதா நடிக்கிறார் என்று சீறுகிறார் முதல்வர் கருணாநிதி. அவர் சிறந்த கதாசிரியர். நன்றாகக் கதை வடிக்கிறார் என்று நான் கூறுகிறேன்.

இடைத்தேர்தல் எப்போது வரும் என்று எதிர்பார்க்கிறேன். வந்தால் நிச்சயமாக எம். எல். ஏவாக மாறிச்சட்டசபைக்குள் நுழைவேன் —இப்படி ராஜேந்தர் சொன்னார், [எ-4]

# காஷ்மீர் மாநில அரசியல் ராஜீவ் அரசு தீவிரபரிசீலனை

புதுடில்லி, ஏப்ரல் 23

காஷ்மீர் மாநிலமும் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படுமா?

இந்த ஊகங்களுக்கு மத்தியில் பிரதமர் ராஜிவ்காந்தியும் காஷ்மீர் மாநில முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லாவும் கடந்த வாரம் புதுடில்லியில் பேச்சுக்கள் நடத்தினர்.

வெளிநாடுகளில் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் மாநிலத்தில் வன்செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது குறித்து பேச்சுக்களின் போது ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

காஷ்மீர் மாநில அரசியல் நிலையை ஸ்திரப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் பற்றியும் பேச்சுக்களின் போது முடிவு எடுக்கப்பட்டது.

மாநில அமைச்சரவையை மாற்றி அமைப்பது, இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் கூடுதல் அமைச்சுக்களை வழங்குவது என்றும் முடிவாகியது.

பிரதமரும் ஏழு மத்திய அமைச்சர்களும் அடுத்த மாதம் காஷ்மீருக்கு விஜயம் செய்யவுள்ளனர். (எ)

## தாக்குதல்

வாஷிங்டன், ஏப். 23

ஆப்கன் நகர் ஜலலபாத் மீது தாக்குதலை நடத்தும்படி அமெரிக்காவே கிளர்ச்சியாளருக்கு உத்தரவிட்டதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இத்தாக்குதல் ஆரம்பமாகி நேற்றுடன் ஏழு வாரங்களாகி விட்டன. [எ]

# திருப்பதி ஏழுமலையானுக்கு சித்திரைப் புத்தாண்டில் வருமானம் 45 லட்சம் ரூபா

திருப்பதி, ஏப்ரல் 23

சித்திரைப்புத்தாண்டுதினத்தன்றும் அதற்கு அடுத்த இரண்டு தினங்களிலும் திருமலை வெங்கடேஸ்வரா ஆலயத்திற்கு வருமானமாக இந்தியப்பணத்தில் 45 லட்சம் ரூபா கிடைத்தது.

சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பக்தர்கள் இம் மூன்று தினங்களில் திருமலைக்கு விஜயம் செய்தனர்.

ஆலயத்தின் பிரதான உண்டியலில் மட்டும் இந்தியப் பணத்தில் 21 லட்சம் ரூபா சேர்ந்தது. தங்கம், வெள்ளியாகப் போடப்பட்ட காணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை.

லட்டு பிரசாதம் விற்ற வகையில் 11 லட்சம் ரூபா [இந்தியப் பணத்தில்] சேர்ந்தது.

விசேட தரிசனத்துக்காக விற்கப்பட்ட நுழைவாயில் டிக்கட்டுக்கள் மூலம் 13 லட்சம் ரூபா [இந்தியப் பணத்தில்] வசூலிக்கப்பட்டது.

திருமலை ஆலய வரலாற்றில் இது ஒரு சாதனை என்று கூறப்படுகிறது. [எ]

## பாராட்டு

வார்ஸோ ஏப்ரல். 23

போலந்து நாட்டுக்கு மீண்டும் பொருளாதார உதவிகளை அளிக்க முன் வந்ததற்காக அமெரிக்காவை சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் வால்செ பாராட்டியிருக்கிறார். (எ)

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தும்

# இலங்கை அரசுப் பிரதிநிதிகளை ஜனாதிபதியே தெரிவு செய்வார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தும் இலங்கை அரசு குழுவில் இடம் பெறுவோரை ஜனாதிபதியே தெரிவு செய்வார்.

வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின கடந்த புதன்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

பேச்சுக்கள் எப்படிப் போகின்றன என்பதை நாம் மதிப்பீடு செய்வோம். அதன் பின்னரே யுத்த நிறுத்தம் பற்றிய விஷயங்கள் குறித்து இந்திய அரசுடன் பேசுவோம்.

அரசியல் நீரோட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பங்குபற்ற வேண்டும் என்பதில் இந்திய அரசும் அக்கறை கொண்டு உள்ளது,

ஆகவே இந்தியாவும் எமக்கு உதவும் என்று நம்புகின்றேன்.

கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னைய கோரிக்கைக்கு இணங்க வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்படுமா?

அமைச்சர்: பாதிக்கப்பட்ட பகுதியினருடன் ஆலோசனை நடத்திய பின்னரே ஏனையோரைப் பாதிக்கும் விஷயங்கள் குறித்து முடிவு செய்யப்படும்.

வெளியுறவு அமைச்சும் நிகழ்ச்சி நிரல் ஒன்றைத்தயாரித்து வருகிறது. திரு. அன்டன் பாலசிங்கமும் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் வரலாம்.

இப்படி திரு. ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார். (இ-எ)

## கண்டாவளை

# உ. அ. அ. அலுவலகம் மே 3 இல் திறக்கப்படும்

கிளிநொச்சி, ஏப்ரல் 24

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் எதிர்வரும் 3ஆம்திகதி திறந்து வைக்கப்படும்.

கண்டாவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தில் இயங்க உள்ள இந்த அலுவலகத்தை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார்.

கிளிநொச்சி கச்சேரியில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு. எஸ். சந்திரராசா கண்டாவளை உதவி அரசாங்க அதிபராக கடமை ஏற்கின்றார்.

இந்த புதிய அலுவலகம் திறந்து வைக்கப்படுவதினால் முன்னர் கிளிநொச்சி உதவி அரசாங்கஅதிபரின் கீழ்இயங்கி வந்த தர்மபுரம், பழைய வட்டக்கச்சி, புளியம்பொக்கணை, ஊரியான் பிரமந்தனாறு, கண்டாவளை போன்ற இடங்களில் உள்ள மக்களின் அலுவல்கள் [illegible] கப்படுகின்றது. [ச-ரி]

# குமுதினி பழுது

நெடுந்தீவு, ஏப்ரல்.24

நெடுந்தீவு, குறிகாட்டுவான் சேவையில் உள்ள ஒரேயொரு அரச மோட்டார் படகான குமுதினி பழுதடைந்துள்ளது.

இப் படகு திருத்த வேலைகளுக்கென, நீலங்காடு படகு திருத்த நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

எனினும் சேவையில் பாதிப்பு ஏற்படாதவாறு நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கப் படகான 'சமுத்திரா தேவி' யும் தனியாருக்குச் சொந்தமான படகு ஒன்றும் சேவையில் ஈடுபடுகின்றன. (ச-11)

# உள்ளூர் விமானசேவை நடத்த மேலும் 5 நிறுவனங்களுக்கு அனுமதி

கொழும்பு, ஏப் 24

உள்ளூர் விமான சேவைகளை நடத்த மேலும் ஐந்து தனியார் நிறுவனங்களுக்கு சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் அனுமதி வழங்கியிருக்கிறார்.

இதனால் உள்ளூர் விமான சேவையில் ஈடுபடுத்தப்படும் விமானங்களின் எண்ணிக்கை ஒன்பது ஆக அதிகரித்து உள்ளது.

எமர்க்கன்டைல் கிரெடிற் நிறுவனத்தின் உப பிரிவான மெர்கயர். எக்ஸ்போ லங்கா புரொடியூஸ் லிமிட்டெட், மிராஜ் ஏவியேஷன், ஏ. ஏ. எஸ் ஜீவான்ஜி ஆகிய நிறுவனங்களே புதிதாக அனுமதி பெற்றவையாகும்.

ஏற்கனவே உபாலி, ஏவியேஷன், எயர் டாக்ஸிஸ், சி.டி.ஈ. ஏவியேஷன், கொன்ஸொலிடேட்டட் என்ஜினியர்ஸ் ஆகிய நிறுவனங்கள் உள்ளூர் விமானசேவையை நடத்தி வருகின்றன. (ஒ-எ)

## துப்பாக்கி அபகரிப்பு

மாங்குளம், ஏப்ரல் 24

ஒட்டுசுட்டானில் பொலீஸாரின் துப்பாக்கி ஒன்று அபகரிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பொலீஸார் உணவுப் பெருள்களை வாங்கிக் கொண்டு வந்த வேளையில் இச்சம்பவம் இடம் பெற்றதாக அறிய வருகின்றது. (க - 94)

வடமராட்சி கிழக்கிற்கு

# தனியான ஒரு ப.நோ.கூ.ச உருவாக்க தீர்மானம்

தாளையடி, ஏப்ரல் 24

வடமராட்சி கிழக்குப்பிரதேசத்துக்குத் தனியான ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்படல் வேண்டும்.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. வீ. எஸ். தியாகராசா தலைமையில் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது. [க-144]

# கிளிநொச்சியில் விரைவில் இரண்டாம் கட்ட நிவாரணம்

அரியாலை, ஏப்ரல் 24

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்த்த லுக்கான இரண்டாம் கட்ட நிதியான 1000 ரூபாவை வழங்குவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட புதிய அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேற்கொண்டுள்ளார்.

இரண்டாம் கட்டக்கொடுப்பனவுகள் முன்னர் போல் காசோலையாக கச்சேரியில் வழங்கப்பட மாட்டாது என்றும் இவற்றை இலங்கை வங்கிகள் மூலம் பணமாக வழங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் அறிய வருகிறது. (இ-13)

# நெசவாலைகள் மாகாணசபையிடம்

கைத்தறி மற்றும் மின்தறி நெசவாலைகள் அனைத்தும் எதிர்வரும் மே மர்தம் முதல் அந்தந்த மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்படும்

புடைவைக் கைத்தொழில் துணை அமைச்சர் திரு. தயானந்த விக்கிரமசிங்க இத்தகவலைத் தெரிவித்தார். [ஒ - எ]




ஜிப்ரியீல் (அலை) அவர்களின் அனுமதிப்படி மலக்குகள் லைலதுல் கத்ருடைய இரவில் பல்வேறு இடங்களில் வாழும் விசுவாசிகளிடமும் செல்கின்றனர். அவ்விசுவாசிகள், மாளிகை, குடிசை, வனம், கடல், கப்பல், போன்ற வற்றிலிருந்தாலும் அங்கெல்லாம் சென்று அவர்களுடன் கைகொடுத்து [முஸா பஹா] ஸலாம் கூறுகின்றனர். ஆனால், உருவப்படம், நாய் பன்றி, கடமையான குளிப்பை நிறைவேற்றாதிருப்போர் போன்றவர்களின் ஸ்தலங்களுக்குச் செல்ல மாட்டார்கள்.

ஸஹர் முடிவு 4 - 25
நோன்பு திறக்கும் நேரம் 6 - 20

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**KAILAS CATARRA OIL**

**கைலாஸ் பீனிஸ் தைலம்**

இது கண், காது மூக்கு, தொண்டை முதலியவற்றில் அரிப்பு, ஓயாத தும்மல், கண்ணீர் வடிதல், நாசியிலிருந்து இரத்தம் வருதல் போன்ற (21) வகையான பீனிஸ வகைளுக்கு நிவாரணம் தரும்.

4 அ, போத்தல் விலை ரூபா 20/

கிடைக்கும் இடம்:-

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்

76, பெரியகடை யாழ்ப்பாணம். போன்: 2313

# உதயன்

24 - 04 - 1989 திங்கட்கிழமை

**தென்னை மரக்குடி எண்ணை**

கை கால் சுளுக்கு, எலும்பு முறிவு, மூட்டு நழுவுதல், வாயு முச்சுப் பிடிப்பு, அடிபட்ட வீக்கம் ரத்தக் கட்டு, முதுகுவலி முதலியன வற்றுக்குச் சிறந்தது.

1 சீசா போத்தல் விலை:- ரூபா 16/-

கிடைக்கும் இடம்:-

க. செ கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

### தேசிய எம். பி. நியமன விவகாரம்:

## ஐக்கிய சோஷலிச முன்னணி பிளவுபடும் ஆபத்து நிலை!

கொழும்பு. ஏப். 24

ஐக்கிய சோஷலிச முன்னணியின் தேசிய வேட்பாளர் யார் என்பது பற்றிய தகராறு முன்னணியில் பிளவை ஏற்படுத்த இருப்பதாகத் தெரிகிறது.

தேசிய எம். பியாக நியமிக்கப்பட்ட டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா காலமானதைத் தொடர்ந்துஇப்பதவி இன்னமும் நிரப்பப்படாமல் இருந்து வருகிறது.

இந்த இடத்தை இலங்கை மக்கள் கட்சிக்கு வழங்க முன்னணி தீர்மானித்து இருந்த போதும் யாரை நியமிப்பது என்பது மக்கள் கட்சியில் கருத்து வேற்றுமையை ஏற்படுத்தி இருக்கிறது.

மக்கள் கட்சித்தலைவியான திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை நியமிக்க கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது.

மக்கள் கட்சியின் அரசியல் மற்றும் மத்திய குழுக்கள் திரு. ஒஸி அபயகுணசேகராவை நியமிக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

சமசமாஜக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி ஆகியன திருமதி குமாரணதுங்க ஐக்கிய சோஷலிச முன்னணியின் தலைவி அல்ல; ஆகவே அவரை எம். பியாக நியமிக்க வேண்டியதில்லை — என்று கருத்துத் தெரிவித்துள்ளன. (ஒ-எ)

## தமிழ் எம். பி.க்கள் சபைக்கு கறுப்புப்பட்டியுடன் செல்வர்

### வெலிஓயாவுக்கு எதிர் நடவடிக்கை

கொழும்பு, ஏப் 24

வெலிஓயாவைத் தனி மாவட்டமாக்கும் உத்தேச திட்டத்தை அரசு கைவிடாத பட்சத்தில் தமிழர் குழுக்கள் ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அந்த நடவடிக்கைகளில்-

★ நாடாளுமன்றத்துக்கு கறுப்புப் பட்டி அணிந்து செல்லுதல்,

★ முக்கிய விவாதங்களைப் பகிஷ்கரித்தல்,- ஆகியன இடம்பெறலாம் என்று சொல்லப்படுகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடும்போது வெலிஓயா தொடர்பாக ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர திரு. அ. அமிர்தலிங்கம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்,

இதனிடையில், இவ்வாரம் ஈரோஸ் எம். பிக்கள் ஜனாதிபதியைச் சந்தித்து வெலிஓயா மாவட்டப் பிரச்சினை தொடர்பாக தங்கள் ஆட்சேபனையைத் தெரிவிப்பர் என்று தெரிகிறது. (ஒ-எ)

## தேசிய பொலீஸ் ஆணைக்குழு நியமிக்க ஏற்பாடுகள்

கொழும்பு, ஏப் 24

தேசிய பொலீஸ் ஆணைக்குழு ஒன்று விரைவில் நியமிக்கப்படவிருக்கிறது.

பிரதம நீதியரசரின் பிரதிநிதி, பொதுச்சேவை ஆணைக்குழுவின் பிரதிநிதி ஆகியோரின் பெயர்களும் பொலீஸ் மா அதிபரின் பெயரும் ஏற்கனவே ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

தேசிய பொலீஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட பின்னரே மாகாண பொலீஸ் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் என்று தெரிகிறது, (ஒ-எ)

**HONDA MOTOR CYCLE**

உதிரிப்பாக விற்பனையாளர்களுக்கு

புதிய **Honda C90, 125, 180**

உதிரிப் பாகங்கள் உடன் விற்பனைக்கு

மேலும் விபரங்கட்கு;

**CANTABIA MOTORS**

21, Main Street,

JAFFNA.

[C/2231]

உங்கள் தேவை!

எங்கள் சேவை!!

● தரமான

● தெளிவான

● சிக்கனமான

தமிழ் ஆங்கில

தட்டச்சு - ரோணியோ

வேலைகளுக்கு

★ ★ ★

**ஷப்ரு** (சேவைப் பகுதி)

இல 19, 2 ஆம் ஒழுங்கை

மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

(/1946)

# இந்திய கொமாண்டர், கேர்ணல் மாதுரு ஓயா மோதலில் காயம்

கொழும்பு, ஏப் 24

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதுரு ஓயாப் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இந்திய அமைதிப் படையின் படையணித் தளபதி ஒருவரும் (Batta'ian Commander, லெப்டினன்ட் கேர்ணல் ஒருவரும் பல ஜவான்களும் படுகாயமடைந்தனர்,

கடந்த வியாழன் இரவு தொப்பியாகல என்னும் இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீது தாக்குதல் நடத்தமுயற்சித்த சமயமே இந்தியப் படையினர் காயமடைந்தனர் எனக் கூறப்படுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காயமடைந்த படையணித் தளபதியும் லெப்டினன்ட் கேர்ணல் ஒருவரும் வைத்திய சிகிச்சைக்காக சென்னைக்கு விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிகிறது என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது,

பொலன்னறுவைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் மாதுரு ஓயாப் பகுதியில் உள்ள மலைக்காட்டு பகுதியில் தொப்பியாகல அமைந்துள்ளது. (உ-எ]

### விடுதலைப் புலிகள், ஜே.வி.பி. ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்காக

# வேண்டுமானல் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கும் தயங்கமாட்டேன்

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 24

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் மக்கள் விடுதலை முன்னணியும் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள உதவுமானல், நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் தயங்க மாட்டேன் என்று ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்திருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தூதராக கடந்த 15 ஆம் திகதி அம்பன்பொலவில் வைத்து திரு. மாணிக்கசோதி ஜனாதிபதியை சந்தித்தார் அல்லவா? அப்போது திரு.பிரேமதாஸா முன் கண்ட தகவலை திரு. மாணிக்கசோதியிடம் கூறினர் என்று விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்களை ஆதாரம் காட்டி சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஆண்டில் அதைக் கலைக்க அரசியல் யாப்பு தனக்கு அதிகாரம் தரவில்லை என்றும்-

ஆனல் எம் பிக்கள் நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படி பிரேரணை ஒன்றை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றினல் நாடாளுமன்றம் தானகவே கலைந்துவிடும் என்றும் ஜனாதிபதி அப்போது சொன்னர் என்று சண்டே டைம்ஸ் செய்தி தெரிவிக்கிறது. [உ-எ]

## ஒளிவு மறைவின்றி நிர்வாகம்

கொழும்பு, ஏப். 24

அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் நாட்டு மக்கள் நன்கு அறிந்து கொள்ளும் விதத்தில் ஒளிவு மறைவின்றி நாட்டின் நிர்வாகத்தை மேற்கொள்வேன்.

இப்படி ஜனாதிபதி பிரேமதாஸ நேற்றுத் தெரிவித்தார்.

அரசுத் திணைக்களத் தலைவர்கள் மத்தியில் பேசுகையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ஒ-எ)

## திருமலை சென்ற பஸ் வவுனியாவில் நிற்கிறது

யாழ்ப்பாணம் ஏப்ரல் 24

நேற்று முன்தினம் யாழ் நகரிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற போக்குவரத்துச் சபை பஸ் பயணத்தைத் தொடரமுடியாத நிலையில் வவுனியாவில் தரித்து நிற்கிறது.

பாதுகாப்பு வசதி வழங்கப்படாத காரணத்தினலேயே இந்த பஸ் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாம்.

இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்தோரில் அனேகர் யாழ்ப்பாணத்துக்கு திரும்பி விட்டனர் எனத் தெரியவருகிறது. (ஒ-9)

## கொழும்பு - யாழ்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களில் ஈடுபடுத்தத் தயாராக உள்ளோம். எமக்கு போதிய அளவு யுவதிகள் கிடைக்கும் பட்சத்தில் இந்திய பெண் பொலீஸாரைத் திருப்பி அனுப்பி விடுவோம்.

எமக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் ஆயுள் காலப் பகைமை இல்லை. அவர்கள் நாளை ஒப்பந்தத்தை ஏற்று ஜனநாயக வழிக்கு வருவார்களானல் நாங்கள் அவர்களைக் கட்டித் தழுவுவோம்.

எமக்கு நீங்கள் நல்கும்ஒத்துழைப்பு போதாது. எம்முடன் ஒத்துழைத்து நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி அவர் கூறினர்.

கூட்டத்தில் குழுமி இருந்தவர்கள் பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

★ சமாதான உடன்படிக்கையின் பின்பும் அரசாங்கம் தமிழர்களை வெளியேற்றி சிங்களவர்களை வெலி ஓயாவில் குடியமர்த்தி உள்ளது இது ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

★ வெலி ஓயா என்னும் மாவட்டமேஉருவாக்கப்பட்டு விட்டது. இந்திய அமைதிப் படை இதையிட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

★ இலங்கை அரசாங்கம் படை திரட்டும் பொழுது தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இலங்கை இராணுவப் படையில் 30 சதவீதமான தமிழர்களாவது சேர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு இராணுவ பிளாற்றூனிலும் (Platoon) ஒரு தமிழராவது இருக்க வேண்டும்.

★ வாரத்தில் மூன்று நாட்களுக்கு நடைபெறும் யாழ்-கொழும்பு ரயில் சேவையைத் தினமும் நடத்த வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்திய அமைதிப்படை செய்து கொடுக்க வேண்டும்.

★ எமது வீதிகள் திருத்தப்பட வேண்டும். தமிழ் பிராந்தியங்களுக்கு ஊடாக தமிழ் மக்கள் பயமின்றி பயணம் செய்யக் கூடிய வகையில் மன்னரில் இருந்து புத்தளம் வரை வீதி அமைக்கப்பட வேண்டும்,

★ அங்கீகரிக்கப்படாதவர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட வேண்டும். இயக்கங்கள் என்று கூறிக்கொண்டு வன்முறையாளரும் கள்ளக் கோஷ்டிகளும் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு நாட்டில் பீதியை ஏற்படுத்தி வருகின்றனர். இவர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட வேண்டும். (ச)

**மரத்தை வெட்டியவருக்கு இந்த அபராதம்!**

வண்டன், ஏப். 24

அனுமதியின்றி இரண்டு மரங்களை வெட்டிய ஒருவருக்கு லண்டன் நீதிமன்றம் ஒன்று 20 ஆயிரம் பவுணை நட்டமாகச் செலுத்தும்படி உத்தரவிட்டது.

நீதிமன்றச் செலவாக 12 ஆயிரம் பவுண்களைச் செலுத்தும்படி அவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது,

விடுகட்டும் நிறுவனம் ஒன்றின் உரிமையாளருக்கே இத் தண்டனை விதிக்கப்பட்டது.

சுற்றுப்புறச் சூழலுக்கு தீங்கு விளைவித்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. [உ-எ)

## ஷொட் கன்கள் அபகரிப்பு!

கொழும்பு. ஏப். 24

வில்பத்து வனவிலங்கு சரணலயத்தில் தென்பகுதி தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் அத்துமீறி நுழைந்து மூன்று ஷொட்கன்களையும் முப்பது தோட்டாக்களையும் கொள்ளையடித்துச் சென்றனர் என்று முறையிடப்பட்டுள்ளது, (ஒ-எ]

## உடைமைகள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

கந்தர்மடம் குண்டு வெடிப்புச் சம்பவத்தின்போது மரணமான தயாபரன் என்பவரின் சடலத்துடன் இருந்த உடைமைகள் இறந்தவரின் குடும்பத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 17 ஆம் திகதி மாலை கோண்டாவில் அமைதிப் படை முகாமில் வைத்து இந்த உடைமைகள் அனைத்தும் வழங்கப்பட்டன. இறந்தவரின் தந்தையான கந்தையா சச்சிதானந்தன் உடைமைகளைப் பொறுப்பேற்ருர்.

தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றுடன் 15 ஆயிரத்து முந்நூற்றுமுப்பது ரூபா பணமும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது (உ-எ)

# மாகாண சபைகளின் கீழ் போக்குவரத்துச் சபை இயங்கும்?

### முடிவை சட்டமா அதிபர் அறிவிப்பார்

கொம்ம்பு, ஏப்ரல் 24

பிராந்திய போக்குவரத்துச் சபைகள் மாகாண சபைகளின் கீழ் செயற்பட மாகாண சபைகள் சட்டம் இடமளிக்கிறதா?

-இதுபற்றி சட்டமா அதிபர் இவ்வாரம் தனது முடிவைத் தெரிவிப்பார்.

கொழும்பு வடக்கு பிராந்திய போக்குவரத்துசபை, கொழும்பு தெற்கு பிராந்திய போக்குவரத்துச்சபை ஆகியவற்றை மேற்கு மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரப்பட்டது.

அப்படிச் செயற்பட மாகாணசபைச் சட்டம் அனுமதித்தால் அதை செயற்படுத்துவதாகவும்-

அப்படி அனுமதிக்காத பட்சத்தில் தன்னல் ஒன்றுமே செய்யமுடியாது என்றும் ஜனாதிபதி மேற்கு மாகாண சபைக்கு அறிவித்திருந்தார்.

இது சம்பந்தமாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறும்படியும் மேற்கு மாகாண சபையை ஜனாதிபதி கேட்டு இருந்தார் (உ-எ)

## சேருவில உ. அ. அதிபரும் சாரதியும் கொலை

கொழும்பு, ஏப்ரல் 24

திருகோணமலை மாவட்டத்தில் சேருவில உதவி அரசாங்க அதிபரும் அவரது கார்ச் சாரதியும் மற்றொரு உதவியாளரும் இனம்தெரியாத கோஷ்டி ஒன்றினல் கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நண்பகல் ஒரு மணியளவில் இச்சம்பவம் மூதூர்த் தொகுதியில் கட்டைப்பறிச்சான் என்னுமிடத்தில் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

கொலையுண்ட உதவி அரச அதிபரின் பெயர் திரு. வர்ணகுரியா. (ஒ-எ)

### போதைவஸ்து கடத்த ஒத்துழைத்த

## மெக்ஸிக்கோ நாட்டின் பொலீஸார் பதவி நீக்கம்

மெக்ஸிக்கோ ஏப் 23

மெக்ஸிக்கோ நாட்டின் மேற்கு மாநில பொலீஸாரில் மூன்றில் ஒரு பங்கினரை மத்திய அரசு வேலை நீக்கஞ் செய்து விட்டது.

போதை வஸ்துக் கடத்தல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியது அம்பலமானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த ஒன்பது ஆண்டு காலமாக இடம் பெற்றுவந்த போதை வஸ்துக் கடத்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த ஒருவரிடமிருந்து பொலீஸார் லஞ்சம் பெற்று வந்தனராம்.

வேலை நீக்கஞ்செய்யப்பட்ட பொலீஸாரில் 13 பேர் உயர் அதிகாரிகள். (எ)

### ஜனாதிபதிக்கு...

கோளை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

இச்சந்திப்புக்கான ஒழுங்கை நீங்கள் செய்வீர்கள் என நம்புகின்றோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.''

—இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## கண்ணீர் அஞ்சலி

### இராசா சண்முகராசா

14-4-89 அன்று கந்தர்மடம் ஆலடிச் சந்தியில் நடந்த பாரிய விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சைபெற்று இன்று (23-4-89) இறையடி சேர்ந்த எமது அன்புத் தோழன்

● இராசா சண்முகராசா ●

(Works Supervisor, ரதி வாச் வேர்க்ஸ்)

அவர்களுக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்.

ரதி வாச் வேக்ஸ் நிர்வாகத்தினரும் ஊழியரும், நண்பர்களும்.

திருநெல்வேலி,
கந்தர்மடம்.

(10665)

## மரண அறிவித்தல்

### திருமதி மரிய சவேரியா மங்கையர்க்கரசி சந்திரசேகரா

திருமதி மரிய சவேரியா மங்கையர்க்கரசி சந்திரசேகரா காலமானர். இவர் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இம்மனுவேல் சந்திரசேகராவின் அன்பு மனைவியும், திருமதி ஏட்னேஸ் சேவியர் [U.K], ரவீந்திரன் [U. K], புலேந்திரன் [U. K] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. A. F சேவியர், திருமதி யூலியற் சயந்தினி சந்திரசேகரா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனி, ஜெறி, ஜெசி, போர்சியா [U.K] ஆகியோரின் அருமைப் பாட்டியும், காலஞ்சென்ற திரு. லியோ தோமஸ், திரு. ராசேந்திரம் தோமஸ், செல்வி மனேன் தோமஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னரின் நல்லடக்க வழிபாடு 26ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்று பின் பூதவுடல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்ருேம்.

தகவல்:

இம்மனுவேல் சந்திரசேகரா

'மங்கையர் இல்லம்'
புனித அந்தோனியார் லேன்,
மாதகல்.

(248)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினுல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 24 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.